**தலைப்பு 430 - காணி முகாமைத்துவ நடவடிக்கைகள், அரசாங்க தொழில்முயற்சி காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

காணி முகாமைத்துவ நடவடிக்கைகள், அரசாங்க தொழில்முயற்சிகள் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி முகாமைத்துவ நடவடிக்கைகள், அரசாங்க தொழில் முயற்சிகள் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின்வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 செப்தம்பர் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனைபிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு ஒரு அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும்மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன.பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

இராஜாங்க அமைச்சின் நிதியேற்பாட்டினை பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) இந்த இராஜாங்க அமைச்சு 2021 ஆம் ஆண்டின் முழுமையான ஆண்டுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்திருந்த போதிலும், 2021 பெப்ரவரி 16 ஆந் திகதிய 2215/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இராஜாங்க அமைச்சின் பணிகள் மற்றும் செயற்பணிகள் காணிகள் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.<br>மேலும், முதலாவது நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது செயற்திட்டத்தின் செலவினம் 2021 பெப்ரவரி 16 ஆந் திகதி வரையிலும் மாத்திரம் மேற்கொள்ளுமாறு தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளரினால் 2021 மார்ச் 15 ஆந் திகதி அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.<br>அதற்கமைய, அதற்குரிய 15 மீண்டெழும் செலவின விடயங்களின் ரூபா 27,046,825 தொகையும், 4 மூலதன செலவின விடயங்களின் ரூபா 1,572,961 தொகையும் சேமிப்பாக காணப்பட்டதுடன், அது 22 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது. | வரவு செலவுத்திட்ட பணிப்பாளரின் BD/RE/122/09/01 ஆம் இலக்க மற்றும் 2021 மார்ச் 15 ஆந் திகதிய கடிதத்தின் 3 (IV) இன் பிரகாரம், செலவின விடயம் 430-01-02 மற்றும் 430-02-03 ஆகியவற்றின் பணிகள் நிதிப்பிரமாணம் 208 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் காணிகள் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டு எஞ்சிய செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.<br>அதற்கமைய 2021 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக காணி முகாமைத்துவ நடவடிக்கைகள், அரசாங்க தொழில்முயற்சிகள் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அத்திகதியில் உள்ளபடியாக மேற்படி செலவின விபரங்களின் எஞ்சிய நிதியேற்பாடு நி.பி. 208 ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இந்த அமைச்சிசிற்கு சாட்டப்பட்டுள்ள போதிலும், 430-01-01 செலவின விடயம் அவ்வாறே அமைசசிற்கு சாட்டப்பட்டிராததுடன், 2021 முழுமையான ஆண்டுக்காகவும் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் 2021 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் மாத்திரம் நிலவிய இராஜாங்க அமைசச்சினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் மாத்திரம் (செலவின விடயம் 430-01-01-2003 நீங்கலாக) மொத்த செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | ஒரு நல்ல திட்டத்தின் அடிப்படையில் வருடாந்திர நிதியேற்பாடுகள் தீர்மானிக்கப்பட வேண்டும். அனுமதிக்கப்பட்ட நிதியேற்பாட்டினை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முதலாவது நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாவது செயற்திட்டத்தின் நிதியேற்பாடு காணிகள் அமைச்சிற்கு சுவீகரித்து செலவினம் மேற்கொள்ளுமாறு தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளரினால் 2021 மார்ச் 15 ஆந் திகதி அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, அதற்குரிய 14 மீண்டெழும் செலவின விடயங்களின் ரூபா 31,787,314 தொகையும், 6 மூலதனச் செலவின விடயங்களின் ரூபா 18,679,887 தொகையும் எஞ்சியிருந்ததுடன், அது 45 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | மேற்குறிப்பிடப்பட்டவாறு காணிகள் அமைச்சிற்கு சாட்டப்பட்ட 430-01-02 செலவின விடயத்தின் நிதியேற்பாட்டினை சேமிப்பதற்கு அரச செலவின மீளாய்வு தொடர்பான 21/1596/304/134 ஆம் இலக்க மற்றும் 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இராஜாங்க அமைச்சினால் திட்டமிடப்பட்ட செலவீனத்தை அந்த அமைச்சு நீக்கப்பட்டதன் மூலம் அதே முறையில் மேற்கொள்ள முடியவில்லை. மேலும், நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக, அலுவலகங்கள் மூடப்பட்டதாலும், உத்தியோகத்தர்கள் பணிக்கு குறைக்கப்பட்டதாலும், எதிர்பார்த்தபடி அனைத்து செலவுகளும் செய்யப்படவில்லை, மேலும் தேவைக்கு ஏற்ப தேவையான பிற செலவுகள் செய்யப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (இ) | இரண்டாம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தை செயல்படுத்த ரூபா 500 மில்லியன் ஒதுக்கப்பட்டது. ஆனால், அதில் ரூபா 240,306,000 மாத்திரம் செலவிடப்பட்டதுடன், ரூபா 259,694,000 ஒதுக்கீடுகள் மீதமுள்ளன. | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கோவிட் தொற்றுநோய் மற்றும் அலுவலக அதிகாரிகள் அவ்வப்போது தனிமைப்படுத்தல், அலுவலகங்கள் மூடல் மற்றும் களத்திற்குச் செல்வதில் சிரமம் காரணமாக, எதிர்பார்த்தபடி முன்னேற்றத்தைப் பெற முடியவில்லை, ஆனால் ரூபா 316,000,000 பணமாக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 240,306,000 மாத்திரம், அதாவது 76 சதவீதம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | -மேற்படி- |